# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 8/2017** **Date:29.01.2026.**

**(DW2)- அம்புஜம்**

<u>**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. பட்டிகை சொத்து சாலையானது திங்கள் சந்தை மற்றும் மாறன் பிரம்பு ஆகிய இடங்களை இணைக்கும் சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையின் இருபுறமும் பல வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு வீடு வாதியின் வீடு என்றால் சரிதான். பட்டிகை சொத்தை அடைப்பதற்கு 1 ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 1 ம் பிரதிவாதியால் பாதை அடைக்கப்பட்டது என்றும் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அப்போது உள்ள செயல் அலுவலரால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. மேற்படி 1 ம் பிரதிவாதியின் செயல் மீது முறையான நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த வழக்கு தாக்கல் செய்யமால் தவிர்திருக்காலம் என்றாலும் அப்போது நான் பதவியில் இல்லை அது சம்பந்தமாக எனக்கு தெரியவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி நீதிமன்றத்தை சுத்த கைகளோடு அணுகவில்லை என்று வழக்கிற்க்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.